கும்பகோணம் தொகுதி

நாகநாதசுவாமி திருக்கோயில் திருப்பணி!

சட்டப்பேரவையில் – சாக்கோட்டை க.அன்பழகன் வலியுறுத்தல்!

சென்னை, மார்ச் 26 - கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஒன்றியம், மானம்பாடி அருள்மிகு நாக நாதசுவாமி திருக்கோயில், திருப்பணி செய்ய அரசு ஆவன செய்யுமா? என சட்டப்பேரவையில் கழக உறுப்பினர் க.அன்பழகன் கேள்வி எழுப்பினார்.

கேள்வி நேரத்தின்போது நடைபெற்ற விவாதம் வருமாறு:-

க.அன்பழகன்: கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஒன்றியம், மானம்பாடி நாகநாதசுவாமி திருக்கோயில், திருப்பணி செய்ய அரசு ஆவன செய்யுமா?

அமைச்சர் பி.கே.சேகர்பாபு: உறுப்பினர் அன்பழகன் அவர்கள் கோரியிருக்கின்ற இந்த திருக்கோயில், ஏற்கெனவே நம்முடைய நிதி அமைச்சர் அவர்களும், உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களும், இந்த திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட திருக்கோயில் என்பதால், பணிகளை உடனடியாக மேற்கொள்ளபடுவதற்கு அனைத்து மதிப்பீடுகளும் தயார் செய்யப்பட்டுள்ளன. ரூபாய் 51 இலட்சம் செலவில், வருகின்ற 11.4.2025 அன்று பாலாலயம் செய்யப்பட்டு, விரைவில் பணிகள் தொடங்கப்படும் என்பதை மூவருக்கும் சேர்த்து மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக பதிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

க. அன்பழகன்: முதலில் நான் என்னுடைய தொகுதி சார்பில், மாண்பிற்கினிய முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கும், ஆன்மிக மக்கள் மற்றும் எங்கள் கோயில் நகர மக்கள் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய அரசு ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, சுமார் 100 கோடி ரூபாய்க்கு மேல் நிதியளிக்கப் பட்டு, பல்வேறு கோயில் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. கும்பகோணத்தில் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள மானம்பாடி அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில், கும்பகோணம் சென்னை சாலையில் 15 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இத்திருக்கோயில் முதலாம் இராஜேந்திர சோழனால் கங்கை கொண்ட சோழபுரம், அருள்மிகு பிரகதீஸ்வரர் திருக்கோயில் கட்டப்பட்ட காலத்தில் இத்திருக்கோயிலும் முதலாம் இராஜேந்திர சோழனால் கட்டப்பட்டுள்ளது.

இத்திருக்கோயில் கட்டப்பட்டு ஆயிரம் ஆண்டுகள் நிறைவடைந்திருக்கிறது. இத்திருக்கோயில் மூன்று துறைகள் மூலமாக மதிப்பீடு செய்யப்படும், இன்னும் திருப்பணிகள் நடைபெறாமல் உள்ளன. இத்திருக்கோயிலில் உள்ள பல்வேறு கல்வெட்டுகள் மூலம் சோழர்களின் வரலாற்று பெருமைகளை அறிந்து கொள்ள முடிகிறது. இத்திருக்கோயிலின் வெளிச்சுற்றில் கருங்கல்லாலான நடராஜர், தட்சிணாமூர்த்தி மற்றும் நந்தி ஆகிய சிற்பங்கள் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன. சோழர்களின் கட்டடக் கலையையும், சிற்பக் கலையையும் பறைசாற்றுகிற இத்திருக்கோயிலை நிதியமைச்சர் அவர்களும், உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களும் பார்வையிட்டிருக்கிறார்கள். அந்த வகையில், இத்திருக்கோயிலில் இந்த ஆண்டே திருப்பணிகள் மேற்கொண்டு, குடமுழுக்கு செய்ய இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்வார்களா?

அமைச்சர் பி.கே.சேகர்பாபு: ஒட்டுமொத்தமாக 507 திருக்கோயில்களை ஆவணப்படுத்தியிருக்கிறோம். தமிழக முதல்வர் அவர்கள் தலைமையிலே இந்த ஆட்சி இருக்கின்றபோதே, இந்த 507 திருக்கோவில்களிலும் நிச்சயமாக குடமுழுக்கு நடத்தப்படும் என்பதை இந்த அவையில் அறுதியிட்டு உறுதி யாகச் சொல்லிக்கொள்கிறேன்.

அந்த வகையில் உறுப்பினர் அவர்கள் கோரிய அனைத்து பணிகளும் நிச்சயமாக நிறைவேற்றித் தரப்படும் என்பதை தங்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

க.அன்பழகன்: ராஜராஜ சோழன் மறைந்து ஆயிரம் ஆண்டுகளைக் கடந்த இதற்குப் பிறகும் அவருடைய புகழ் இன்னும் பேசப்படுகிறது. அதேபோன்று, முதலமைச்சர் அவர்களை, இன்னும் ஆயிரம் ஆண்டுகளைக் கடந்தும் ஆன்மிக மக்களும், நாட்டு மக்களும் பாராட்டுவார்கள், போற்றுவார்கள் என்று நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

கும்பகோணம் காளஹஸ்தீஸ்வரர் திருக்கோயிலுக்கு புதிதாக தேர் செய்வதற்கு அரசு முன்வருமா என்பதையும், கும்பகோணம், கொட்டையூரில் அருள்மிகு கோடீஸ்வரர் சுவாமி திருக்கோயிலுக்கு கடந்த 5 ஆண்டுகாலமாக திருத்தேர் செய்யும் திருப்பணி இன்னும் நடைபெறாமல் உள்ளதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். கும்பகோணம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளிலுள்ள பழமையான நூற்றுக்கும் மேற்பட்ட திருக்கோயில்கள் உள்ளன. இத்திருக்கோயில்களில் வழிபாடுகள் இல்லாமல், பின்னமான கற்சிலைகள், பழமையான சக்கரங்கள், தேர்ச் சட்டங்கள், தேர் அச்சுகள் உள்ளிட்ட பல்வேறு விதமாக சிதறிக் கிடக்கின்றன. நூறு ஆண்டுகளுக்கும் மேற்பட்டிருக்கிற இந்த பழமையான பொருட்களை இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை மூலமாக அருங்காட்சியகம் அமைத்து, மக்களுடைய பார்வைக்குக் கொண்டு வருவார்களா என்பதை தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மேலும், கும்பகோணம் பகுதியைச் சுற்றிலுமுள்ள திருக்கோயில்களை தரிசனம் செய்திட இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களில் இருந்தும் மட்டுமல்லாது வெளிநாடுகளிலிருந்தும் அதிகளவில் சேவார்த்திகள் வருகை தருகின்றார்கள். அவ்வாறு சேவார்த்திகள் அதிகளவில் வருகை தருகின்ற திருக்கோயில்களின் வரலாறு, பண்பாடு மற்றும் கலையம்சங்கள் உள்ளிட்டவற்றை அவர்களுக்கு விளக்கிட இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை சார்பாக வழிகாட்டு மையம் அமைத்து வழிகாட்டிகளை நியமனம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

அமைச்சர் பி.கே.சேகர்பாபு: தஞ்சாவூர், கும்பகோணம் போன்ற மாவட்டங்களில் நடைபெறுகின்ற திருப்பணிகள் குறித்து இந்த மன்றத்தில் பதிவு செய்ய விழைகிறேன். யுனெஸ்கோ என்ற நிறுவனம் ஆண்டுக்காண்டு கலை மற்றும் அறிவியல் சார்ந்து ஓர் ஆய்வினை மேற்கொள்கிறது. அதில் நம்முடைய கும்பகோணத்தில் இருக்கும் துக்காச்சி அம்மன் திருக்கோயிலுக்கு இந்த ஆண்டு UNESCO விருது வழங்கப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியான செய்தியாக இந்த மன்றத்தில் பதிவு செய்ய கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், கும்பகோணத்தில் தேவஸ்தானத்தின் சார்பில் 88 திருக்கோயில்கள் இருக்கின்றன. அதில் புன்னைநல்லூர் மாரியம்மன் திருக்கோயில் போன்ற ஓரிரு திருக்கோயில்களில் தான் வருமானம் நிரந்தரமாக இருக்கும். மற்ற 80க்கும் மேற்பட்ட திருக்கோயில்களில் தீபம் ஏற்றுவதற்குண்டான சூழல் கூட இல்லாததை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தவுடன், முதலாமாண்டாக, 2022 - 23 ஆண்டில் 3 கோடி ரூபாயை அரசு சார்பில் மானியமாக வழங்கிய முதல்வர் நம்முடைய முதல்வர். அதேபோல் 2023 - 24 ஆம் ஆண்டில் கூடுதலாக இன்னுமொரு 3 கோடி ரூபாய் மானியமாக வழங்கிய முதல்வர் நம்முடைய முதல்வர். கடந்த ஆண்டு 2024 - 25 ஆம் ஆண்டு 6 கோடி ரூபாய் மானியமாக வழங்கி, இதுவரையில் தஞ்சாவூர் தேவஸ்தானம் சார்பில் நடைபெறுகின்ற திருக்கோயில்களுக்கு 12 கோடி ரூபாய் மானியமாக வழங்கியதால், இருளில் சூழ்ந்திருந்த தெய்வங்களுக்கு இன்றைக்கு விளக்கு வெளிச்சத்தில் மகிழ்ச்சியாக தெய்வங்கள் கூட இருக்கின்ற ஓர் ஆட்சி, இந்த ஆட்சி என்பதை பதிவு செய்ய கடமைப்பட்டிருக்கிறேன்.

அவர் கோரிய திருத்தேர், அதேபோல் அவர் கோரிய ராஜநிலை கோபுரங்கள் ஆகிய இரண்டிற்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, இந்த ஆண்டு இறுதிக்குள் 5 நிலை ராஜகோபுரம் கட்டித் தரப்படும். இந்த ஆண்டு இறுதிக்குள் மரத்தேர் அந்தத் திருக்கோயிலுக்கு உறுதியாக ஏற்படுத்தித் தரப்படும்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் கழக கொடிக்கம்பத்தை அகற்றும் போது கிளைச் செயலாளர் ராமமூர்த்தி உயிரிழந்தார். மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் நேரில் அஞ்சலி செலுத்தி குடும்பத்தாருக்கு ஆறுதல் தெரிவித்து நிதி உதவி அளித்தார்.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம்

ஊத்தங்கரை வடக்கு ஒன்றியத்தில் மின்சாரம் தாக்கி கிளை செயலாளர் உயிரிழப்பு!

மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. நேரில் ஆறுதல் கூறி நிதி உதவி!

கிருஷ்ணகிரி, மார்ச் 26 - கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் ஊத்தங்கரை வடக்கு ஒன்றியம் மூன்றம் பட்டி ஊராட்சிக்கு உட்பட்டது கேத்துநாயக்கன்பட்டி. இந்த ஊரை சேர்ந்தவர் ராமமூர்த்தி (வயது 50). இவர் கேத்துநாயக்கன்பட்டி கழக கிளை செயலாளராக இருந்து வந்தார்.

இந்த நிலையில் தலைமை அறிவித்தப்படி கேத்துநாயக்கன்பட்டியில் பொது இடத்தில் இருந்த கழக கொடிக்கம்பத்தை அகற்றும் பணியில் ராமமூர்த்தி மற்றும் நிர்வாகிகள் ஈடுபட்டிருந்தனர்.

கொடிக்கம்பத்தை அகற்றிய போது அந்த வழியாக சென்ற மின்கம்பியில் உரசியதாக தெரிகிறது. கொடிக்கம்பமானது இரும்பு கம்பியாக இருந்ததால் அதன் வழியே ராமமூர்த்தி உள்பட 5 பேர் மீது மின்சாரம் பாய்ந்தது.

இதில் படுகாயம் அடைந்த அனைவரையும் அருகில் இருந்தவர்கள் மீட்டு சிகிச்சைக்காக ஊத்தங்கரை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு சிகிச்சை பலனின்றி ராமமூர்த்தி பரிதாபமாக உயிர் இழந்தார். மேலும் படுகாயம் அடைந்த கேத்துநாயக்கன்பட்டி முன்னாள் ஊராட்சி தலைவர் பூபாலன் (50), பெருமாள் (46), ஆறுமுகம் (56), சர்க்கரை (55) ஆகிய 4 பேருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்த சம்பவம் தொடர்பாக சிங்காரப்பேட்டை போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

தகவல் அறிந்ததும் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. விரைந்து சென்று இறந்த கிளைக் கழக செயலாளர் ராமமூர்த்தி உடலுக்கு அஞ்சலி செலுத்தி அவர்களது குடும்பத்தாருக்கு ஆறுதல் தெரிவித்து நிதி உதவி அளித்தார் பின்னர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் ஆறுமுகம் , பெருமாள் , பூபாலன் ,சர்க்கரை ஆகிய நான்கு பேரையும் சந்தித்து ஆறுதல் கூறினார் பின்னர் விபத்து நடந்த இடத்தை பார்வையிட்டார்.

இது குறித்து கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் தே. மதியழகன் விடுத்துள்ள அறிக்கையில்

பொது இடங்களில் உள்ள கொடிக்கம்பங்கள் அகற்றப்பட வேண்டும் என்று உயர் நீதிமன்ற உத்தரவினை தொடர்ந்து கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் உள்ள திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த கழக கொடி கம்பங்களை அகற்றப்பட வேண்டும் என உத்தரவிடப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், ஊத்தங்கரை வடக்கு ஒன்றியம், மூன்றாம்பட்டி ஊராட்சியைச்சார்ந்த கேத்துநாயக்கன்பட்டி கிராமத்தில் அமைக்கப்பட்டிருந்த கழக கொடி கம்பத்தினை கிளை கழக செயலாளர் ராமமூர்த்தி, . சக்கரை, ஆறுமுகம், பெருமாள் , பூபாலன் ஆகிய கழகத் தோழர்கள் கொடி கம்பத்தினை அகற்றிக் கொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாக மின்கம்பியில் பட்டு மின்சாரம் தாக்கி மேற்கண்ட ஐந்து பேரும் காயமடைந்த நிலையில் ஊத்தங்கரை அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். மருத்துவமனைக்கு செல்லும் வழியில் ராமமூர்த்தி அவர்களது உயிர் பிரிந்தது.

இந்த சம்பவம் கழகத்தில் உள்ள அனைவருக்கும் பேரதிர்ச்சியாக உள்ளது. அண்ணனை இழந்து வாடும் அவரது மனைவி, குழந்தைகள் மற்றும் அவரது குடும்பத்தாருக்கும், கழகத் தோழர்களுக்கும் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பாக ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நிலையில் சட்டமன்ற கூட்டத் தொடர் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற வேளையில் தகவல் அறிந்த நான் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களுக்கும்,

துணை முதலமைச்சர் இளம் தலைவர் அவர்களுக்கும் தகவல் தெரிவிதேன். அவர்கள் உடனடியாக சம்பவம் நடந்த ஊத்தங்கரைக்கு நேரில் சென்று அஞ்சலி செலுத்தி அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறும் படி எனக்கு உத்தரவிட்டார்கள்.

இதனைத் தொடர்ந்து சென்னையிலிருந்து அவசரமாக நேரில் ஊத்தங்கரைக்கு விரைந்தேன் ராமமூர்த்தி அவர்களது உடலுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, அவரது குடும்பத்தாருக்கு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக மூன்று லட்சம் ரூபாய் நிதிஉதவியும், இன்று நடைபெறுகின்ற இறுதி அஞ்சலி நிகழ்ச்சிக்கு 50 ஆயிரம் ரூபாயும் வழங்கி ஆறுதல் கூறி அன்னாரது இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினோம்.

மேலும் காயமுற்று மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நான்கு பேரையும், மருத்துவமனை சென்று அவர்களுக்கு ஆறுதல் கூறி நான்கு பேருக்கும் தலா 25 ஆயிரம் ரூபாய் மருத்துவச் செலவுக்கு நிதி உதவி மாவட்ட கழகம் சார்பில் வழங்கினோம்.

இனிவரும் காலங்களில் கொடிக்கம்பம் அகற்றிடும் போது மிகவும் கவனத்துடன் கையாள வேண்டும் என தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அறிக்கையில் கேட்டுக் கொண்டார்.

நூறாண்டுக் கோரிக்கையான 'நந்தன் கால்வாய் திட்டத்தை' அறிவித்த முதல்வருக்கு நன்றி!

கல்லணையைக் கட்டிய கரிகாலன் போல் முதல்வர் மு.க.ஸ்டாலினும் வரலாற்றில் நிலைத்து நிற்பார்!

சட்டப்பேரவையில் – கழக உறுப்பினர் அன்னியூர் சிவா பேச்சு!

சென்னை, மார்ச் 26- சட்டப்பேரவையில் நேற்று முன்தினம், நீர்வளத் துறை மற்றும் இயற்கை வளங்கள் மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் கழகத்தின் சார்பில் பங்கேற்றுப் பேசிய விக்கிரவாண்டி தொகுதி கழக உறுப்பினர் அன்னியூர் சிவா, "விக்கிரவாண்டி தொகுதியில் 'பெஞ்சால்' புயலால் சேதமடைந்த 35 ஏரிகளைச் சீரமைத்திட வேண்டும்" என்று வேண்டுகோள் விடுத்தார்.

மேலும் அவர் தமது உரையில், "நூறாண்டுக் கோரிக்கையாக இருந்து வந்த 'நந்தன் கால்வாய் திட்டத்தை' அறிவித்த முதல்வர் அவர்களுக்கு நன்றி!" என்று குறிப்பிட்டார்.

சட்டப்பேரவையில் அவர் பேசியதாவது:-

நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் தனது மானியக் கோரிக்கையினை இந்த மாபெரும் அவையில் விவாதத்திற்காக சமர்ப்பித்துள்ளார்கள். அவர்களுக்கு முதற்கண் எனது தலையாய வணக்கத்தையும். மனமார்ந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

"வரப்புயர நீருயரும்
நீருயர நெல்லுயரும்
நெல்லுயரக் குடி உயரும்
குடியுயரக் கோனுயரும்
கோனுயரக் கோனுயர்வான்"

என்ற தமிழ் மூதாட்டி அவ்வையாரின் வரிகளுக்கேற்ப. வேளாண்மைக்கு ஆதாரமாக விளங்கும் நீர்வளத் துறையின் மானியக் கோரிக்கை இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த வேளையில். எனக்கு இந்த அவையில் பேச வாய்ப்பளித்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும். வருங்காலத் தமிழகத்தை வழிநடத்த இருக்கின்ற எங்கள் மூன்றாம் கலைஞர் அண்ணன் துணை முதலமைச்சர் அவர்களுக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) "நீரின்றி அமையாது உலகு" என்ற அய்யன் வள்ளுவரின் வாக்கிற்கேற்ப அந்த வரிகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து. நம்முடைய முதலமைச்சர் அவர்கள். நீர்வளத் துறைக்கு ஒரு பொறுப்பான நீண்ட நெடிய அனுபவம் கொண்ட. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆறுகளையும். கால்வாய்களையும். அணைகளின் பெயர்களையும். விரல்நுனியில் வைத்திருக்கும். எங்கள் பொதுச் செயலாளர் அவை முன்னவர் அய்யா துரைமுருகன் அவர்களுக்கும். விழுப்புரம் மாவட்டத்தின் விடிவெள்ளி. வனத் துறை அமைச்சர் பேராசிரியர் க.பொன்முடி அவர்களுக்கும். அமைச்சர் பணி கடுமையாக இருந்தாலும். இன்றளவும் இயற்கை விவசாயத்தை நேசித்து. அதை சுவாசமாக செய்து வருகின்ற கழகத்தின் முதன்மைச் செயலாளர் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர். எங்கள் மரியாதைக்குரிய கே.என். நேரு அவர்களுக்கும். என்னுடைய பணிவான வணக்கங்களைத் தெரிவித்து. என்னை வாக்களித்து வெற்றி பெறச் செய்து இந்த அவைக்கு அனுப்பிய விக்கிரவாண்டி தொகுதி மக்களுக்கும் என்றென்றும் நான் நன்றிக்கடன்பட்டவனாக இருப்பேன் எனத் தெரிவித்து. எனது உரையைத் தொடங்குகிறேன்.

வேளாண் விவசாயத்திற்கு இன்றியமையாத் தேவை நீராதாரம் என்ற அடிப்படையில் நீர்வளத் துறைக்காக 9 ஆயிரத்து 460 கோடி ரூபாய் தொகையை கடும் நிதி நெருக்கடியிலும் அத்துறைக்கு ஒதுக்கீடு செய்த தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும். நிதி மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களுக்கும். நிதி ஆதாரங்களைத் திட்டமிட்டு. ஒழுங்கமைத்து. நிதி மேலாண்மை செய்து வருகிற நம்முடைய நிதி ஆதாரங்களைத் திட்டமிட்டு. ஒழுங்கமைத்து. நிதி மேலாண்மைச் செய்து வருகிற நமது நிதித் துறை முதன்மைச் செயலாளர் உதயச்சந்திரன். I.A.S.. அவர்களுக்கும் இந்த நேரத்தில் எனது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"நீரின்றி அமையாது உலகு.

நிச்சயம் அப்படியே அமையட்டும் - ஆனால்

செருக்களத்து நீராம் செந்நீரும்

உருக்குலைந்த ஏழையின் கண்ணீரும்-அல்லாத

நீர் இன்றி அமையா உலகு."

- என அப்பாடல் அமையட்டும் என்று நல்லாட்சி தந்த நாயக ராகவும். நற்றமிழ் வளர்த்த புரவலராகவும். சொல்லாலும். செயலாலும். எழுத்தாலும் தமிழ் வளர்த்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எழுதிய கவிதை வரிகளை சுவாசித்து. இங்கு எனது உரையை இனிதே துவங்குகிறேன்.

பல முன்னோடித் திட்டங்கள்!

தமிழ்நாட்டு மக்கள் நமக்கு வழங்கிய ஆட்சியை அவர்களுக்கான ஆட்சியாக நாம் வழங்க வேண்டும் என்ற நோக்கத்துடன். நமது திராவிட மாடல் அரசு பல முன்னோடித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாடு அனைத்து நிலைகளிலும் வளர்ச்சி பெறவேண்டும் என்ற இலட்சிய நோக்கத்துடன் நமது திராவிட மாடல் அரசு செயலாற்றிவரும் நிலையில், அதற்கு மேலும் சிகரம் வைத்தாற்போல். சென்னை மக்களின் தாகம் தீர்ப்பதற்காக 4.375 ஏக்கர் நிலப்பரப்பில். சுமார் 16 டி.எம்.சி. கொள்ளளவில் ஆண்டுக்கு 2.25 டி.எம்.சி. அளவிற்கு வெள்ள நீரை சேமிக்கும் வகையில். சென்னையில் ஆறாவது நீர்த்தேக்கமாக புதிய நீர்த்தேக்கம் ஒன்று 350 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என ஆறாவது முறையாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தமிழ நாட்டில் முதலமைச்சராக வீற்றிருக்கும் எங்கள் உயிரனைய தங்கத் தளபதி. கழகத் தலைவர். அடுத்த தேர்தலைப் பற்றிச் சிந்திக்காமல். அடுத்த தலைமுறையைப் பற்றிச் சிந்திப்பவர் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே தலைசிறந்த முதலமைச்சராக தமிழ்நாட்டை வழிநடத்திக் கொண்டிருக்கும் எங்கள் திராவிட மாடல் நாயகர். முதலமைச்சர் விளங்குகிறார்கள்.

அன்று கல்லணையைக் கட்டினார். கரிகாலன் என்பதைப்போல். இன்று சென்னையில் அமையவுள்ள ஆறாவது நீர்த்தேக்கத்தை நிறுவினார் என்று வரலாற்றில் இடம் பெறப்போகும் (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் மக்கள் தலைவர் திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களைப் போற்றி வணங்கி. முக்கியத்துவம் வாய்ந்த எனது கோரிக்கைகளை இங்கு எடுத்துவைக்கிறேன்.

சாத்தனூர் அணையிலிருந்து ஆண்டுதோறும் மழைக்காலங்களில் நிரம்பி வழியும் 5.87 டி.எம்.சி. அளவுள்ள உபரி நீரை ஊட்டுக்கால் வாய் அமைத்து. திருவண்ணாமலை மாவட்டத்தில் 2.610 ஏக்கர் மற்றும் நந்தன்கால்வாய்மூலம் 6.654 ஏக்கர் ஆய்க்கட்டுகள் பாசன வசதி பெற ஏறத்தாழ 286 ஏக்கர் பட்டா நிலத்தையும். 53.92 ஏக்கர் புறம்போக்கு நிலத்தையும் மற்றும் 36 ஏக்கர் வனத் துறை நிலத்தையும் கையகப்படுத்தி. இத்திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்தினால். திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள 33 கிராமங்களில் உள்ள விவசாயிகளும். விழுப்புரம் மாவட்டத்தில் 24 கிராமங்களில் உள்ள விவசாயிகளும் பயன்பெறுவார்கள்.

ஏறத்தாழ நூறாண்டுகால விவசாயிகளின் கோரிக்கையை இந்த மன்றத்தில் 1952 ஆம் ஆண்டிலிருந்து 65 ஆண்டுகாலமாக. ஒவ்வோராண்டும் நீர்வளத் துறையின் மானியக் கோரிக்கையின்போதும் வைக்கப்படுகின்ற இந்தக் கோரிக்கையை. இந்த ஆண்டு விழுப்புரம் மாவட்டத்தில் கடந்த 28.1.2025 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வருகைதந்தபோது. 350 கோடி ரூபாய் மதிப்பீட்டில். இத்திட்டம் நிறைவேற்றப்படும் என்று அறிவித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக. இரண்டு மாவட்ட விவசாயிகளின் சார்பாக. எனது சிரம் தாழ்ந்த நன்றிகளை முதலமைச்சர் அவர்களுக்குக் காணிக்கையாக்குகிறேன்.

அடுத்ததாக. நந்தன் கால்வாய் முடியும் பனமலை ஹீசா பெரிய ஏரியின் கரையைப் பலப்படுத்தி. நீர்த் தேக்கமாக மாற்றித் தர வேண்டுமென்று நீர்வளத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

புதிய அணைக் கட்டை கட்டித் தந்த முதல்வருக்கு நன்றி!

அடுத்ததாக. விழுப்புரம் மாவட்டத்தில். திருக்கோவிலூர் தொகுதியில் கடந்த ஆண்டு பெய்த கடும் பெருமழையால் முழுமையாகப் பாதிக்கப்பட்ட எல்லீஸ் அணைக் கட்டை 89 கோடி ரூபாய் செலவில். 15.000 ஏக்கர் பாசன வசதி பெறுவதற்கு ஏற்றவாறு புதிதாகக் கட்டித் தந்த தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும். நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும். வனத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும். சாத்தனூர் அணையிலிருந்து விழுப்புரம் மாவட்டத்தின் வழியாக புதுச்சேரி நோக்கிச் செல்லும் தென்பெண்ணையாற்றில். 67 வாய்க்கால்கள் உள்ளன. இதன்மூலம் 7.000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. இந்த வாய்க்கால்களில் உள்ள தலைப்பு மதகுகளைச் சீரமைத்து மழைக்காலங்களில் கிராமங்களுக்குள் வெள்ள நீர் புகாத வண்ணம் நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக. விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகத்திலும். புதிய பேருந்து நிலையத்திலும். மழைக்காலங்களில் அதிக அளவில் நீர் தேங்குகிறது. இதனைத் தடுக்கும்பொருட்டு. வழுதரெட்டி ஏரியின் உபரி நீரையும். மழை நீரையும். சாலாமேடு அய்யனார் ஏரிக்குச் செல்லும் வரத்துக் வாய்க்காலைச் சீரமைத்து. அதன் உபரி நீரோடு சாலாமேடு ஏரிக்குத் திருப்பினால். விழுப்புரம் நகரப் பேருந்து நிலையத்திலும். மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலும் மழைநீர் தேங்காமல் இருக்கும் என்று பொதுமக்கள் கருதுகிறார்கள். அதற்கு செயல்வடிவம் கொடுக்க வேண்டுமென்று இந்த அவையில் எனது கோரிக்கையைப் பதிவு செய்கிறேன்.

விழுப்புரம் மாவட்டம். விக்கிரவாண்டி தொகுதியில். கடந்த டிசம்பர் மாதம் பெஞ்சல் புயலால் வரலாறு காணாத தொடர்மழை பெய்து. பம்பை வாய்க்காலின் அருகில் உள்ள 15க்கும் மேற்பட்ட ஏரிகளின் கரைகளில் உடைப்பு ஏற்பட்டதால். பம்பை வாய்க்காலின் கொள்ளளவிற்கு அதிகமான வெள்ளநீர் வந்ததால். சுமார் 20 கிலோ மீட்டர் தூரத்திற்கு கரைகள் மற்றும் குறுக்கே உள்ள காங்கேயனூர் அணைக்கட்டு. அகரம் சித்தாமூர் அணைக்கட்டு. திருவாமாத்தூர் அணைக்கட்டு. செம்போடை அணைக்கட்டு ஆகியவற்றில் சேதம் ஏற்பட்டது. அதனை இந்த ஆண்டே நிவர்த்தி செய்ய உரிய உத்தரவுகளைப் பிறப்பிக்க வேண்டும் என்று நான் மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல. விக்கிரவாண்டி தொகுதியில் உள்ள 35 ஏரிகளின் கரைகள் உடைந்தும். மதகுகள் உடைந்தும் வெள்ளநீரால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. அந்த ஏரிகளையும் நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கனிவோடு பரிசீலனை செய்து. இந்த ஆண்டு சீர்செய்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும். கடந்த டிசம்பர் மாதம் பெஞ்சல் காரணமாக விழுப்புரம். கடலூர். திருவண்ணாமலை. கள்ளக்குறிச்சி. தர்மபுரி. கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் கடுமையான சேதம் ஏற்பட்டது. இந்தப் புயலில் பெண்ணையாறு வடிநிலப்பகுதிகளில் உள்ள 247 ஏரிகள். முக்கிய அணைக்கட்டுகள். பாசன வாய்க்கால்கள் மற்றும் ஆறுகளில் பெரும் சேதம் ஏற்பட்டது. அவை தற்போது தற்காலிகமாக சீரமைக்கப் பட்டுள்ளது. மேலும். பாதிக்கப்பட்ட இந்த ஏரிகளின் நிரந்தர சீரமைப்பிற்கு உரிய நிதியை ஒதுக்கி. ஆவன செய்ய வேண்டும் என்று நீர்வளத் துறை அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

பாவேந்தருக்கு மணிமண்டபம்!

கனிமவளத் துறையின் சார்பாக விவசாய நி